**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 38/2017**

திரு. ரத்தினசாமி த/பெ. ராமசாமி (P.W.–1) **08.08.2024.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. அ.வ.எண். 38/2017 தாக்கல் செய்யப்பட்டது என்றால் தாவா சொத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா பெயர் ராமசாமி எனது தயார் பெயர் சரஸ்வதி. மேற்படி ராமசாமி மற்றும் சரஸ்வதிக்கு பிறந்த குழந்தைகள் இரண்டு ஆண் மக்கள் இரண்டு பெண்கள். 1– ரத்தினசாமி, 2– கோவிந்தராஜ், 3– சுமதி, 4– ராஜேஸ்வரி. நான் bleaching and dyeing தொழில் செய்து வருகிறேன். சுமார் 17 அல்லது 18 வயது இருக்கும் போதில் இருந்தே செய்து வருகிறேன். எனது தம்பி கோவிந்தராஜ் பள்ளிக்கு சென்றுவந்தார். அவரது படிப்பு இடையில் நிறுத்தி workshop சென்றார். எனது தகப்பனாரால் முதலில் dyeing company shiva shanmugam bleachers. அது 1979 ம் ஆண்டு . யார் யாரால் என்றால் முத்துசாமி, சுப்பையன் மற்றும் தகப்பனார்.

2. ராஜேஸ்வரி நிறுவனம் 1984 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனக்கு தொழில் தவிர்த்து வேறு வகையில் வருமானம் இல்லை என்றால் சரியல்ல. Steel மற்றும் iron தொழில் செய்து வந்தேன். மேற்படி Steel மற்றும் iron தொழில் செய்து வந்தேன் என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தனிப்பட்ட வருமானம் இருந்தது என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். prince dyeing company எந்த வருடம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 1992– ம் துரைசாமி, குணசேகரன் மற்றும் எனது தகப்பனாரால் ஆரம்பிக்கப்பட்டது. New prince dyeing என்ற நிறுவனம் எப்போது யாரால் ஆரம்பிக்கப்பட்டது என்றால் அது போன்ற இருப்பதாக தெரியவில்லை.

3. மேற்படி New prince dyeing நிறுவனம் என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது எனது தம்பி கோவிந்தராஜ் தாவா சொத்தில் ஒரு பகுதியில் ஆரம்பித்தார் என்றால் இல்லை. சொத்தின் பகுதியிலும் நானும் என் தகப்பனாரும் தொழில் செய்துவந்தோம். 1983– ம் ஆண்டு தாவா சொத்தை எனது தந்தை கிரயம் பெறும் போது எனக்கு வயது 22 இருக்கும். shiva shanmugam bleachers நிறுவனத்தை நானும் எனது தம்பியும் மற்றும் எனது சேர்ந்து நடத்தி வந்தோம் என்றால் இல்லை. மேற்படி நடத்தி வந்த தொழில் வந்த வருமானத்தில் தான் rajeshwari bleaching என்ற நிறுவனத்தை நான் ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மூவர் நடத்தி தொழிலில் வந்த வருமானத்தில் தான் தாவா சொத்தை கிரயம் பெற்றோம் என்றால் சரியல்ல.

4. மேற்படி 4 நிறுவனங்களையும் குடும்பத்தில் உள்ள 3 ஆண் மக்கள் நடத்தி வந்தோம் என்றால் சரியல்ல. 8 ம் பிரதிவாதி நிறுவனத்தில் எங்கள் சொந்தமான 4 நிறுவனங்களின் பெயரில் கூட்டாக தொகை செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. New prince bleaching என்ற நிறுவனம் இருக்க வில்லை. எனவே அதற்கு தொகை செலுத்தவில்லை. prince dyeing, rajeshwari bleaching and ratana & co செலுத்தப்பட்டது மேற்படி நிறுவனத்தில் செலுத்தப்பட்ட தொகை இன்றும் நிலுவையில் உள்ளது யாரும் பெற வில்லை என்றால் அது தரமாட்டாது.

5. மேற்படி 4 நிறுவனங்களில் தற்போது எந்த நிறுவனம் செயல்பாட்டில் உள்ளது என்றால் prince dyeing தான் உள்ளது. எனது பெயரில் உள்ள நிறுவனங்கள் பெயர்கள் என்ன வென்றால் redsun garments. மேற்படி நிறுவனம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2010. எனது சகோதரர் 2012 காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவர் new prince dyeing நிறுவனத்தில் இருந்த இயந்திரங்களை நான் எடுத்து விற்பனை செய்துவிட்டேன் என்றால் அது போன்ற நிறுவனமே இருக்கவில்லை.

6. அ.வ.எண். 38/2017 வழக்கில் 6 ல் 1 பங்கு கேட்டு உள்ளேன் என்றால் 5 ல் 1 பங்கு கேட்டுள்ளேன். எனது தம்பி சொத்தில் ஒரு பங்கு உள்ளது என்றால் அ.வ.எண். 38/2017 வழக்கில் ஒரு பங்கு உள்ளது. நான் சொல்வது தவறு

என்றும் நிலத்திலும் பாத்தியப்பட்ட நிறுவனங்களிலும் 5 ல் 1 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதரர் காலமாகும்வரை அவர் நிறுவனத்தில் தான் வேலை செய்து வந்தார் என்றால் இல்லை. அ.வ. எண். 98/21 வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து எனக்கு மட்டும் பாத்தியப்பட்டதல்ல என்பதால் மேற்படி பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

7.எனது தம்பி காலமாகிவிட்டதால் அவரது பெயரை ஆவணங்களில் சேர்க்காமல் தவிர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. எனது 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு சொத்துகளிலும் கூட்டாக 1 பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.08 12:56:14 +0530

கூடுதல் சார்பு நீதிபதி(FAC),
திருப்பூர்.